10.3.2026

O.S.No.176/2024

DW1- பரமசிவன் – த/பெ. காளிமுத்து நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.03.2026

குறுக்கு விசாரணை : ( வாதிகள் தரப்பில்)

1. இவ்வழக்கின் சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. காளிமுத்து நாடார் எனது தகப்பனார் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.3 என் தகப்பனாருக்கு குத்தாலம்பிள்ளை கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.3 பத்திரத்தின் படி அயன் புஞ்சை சர்வே.46/1, 87/1, 87/7 ஆகிய எண்களில் 6 ஏக்கர் 47 சென்டில் பிரிவின்றி பாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

5. அயன் புஞ்சை சர்வே.46/1, 87/1, 87/7 ஆகிய மூன்று சொத்துக்களும் ஸ்தலத்தில் சேர்ந்தணையாக அடுத்தடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். முதல் மேலோரமாக சர்வே எண்.46/1 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.46/1ற்கு அடுத்த கீழ்புறமாக தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரியல்ல.

6. சர்வே எண்.46/1ற்கு கீழ்புறமாக பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பாதையானது மடவா விளாகம் ஊருக்கு போகும் ரோடு என்றால் சரியல்ல.

7. சர்வே எண்.46/1ற்கு கீழ்புறமாக சர்வே எண்.87/1 சொத்து உள்ளது என்றால் சரிதான்.

8. சர்வே எண்.87/1 சொத்திற்கு கீழ்புறமாக தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். தென்வடல் தெருவிற்கு அடுத்த கீழ்புறமாக சர்வே எண்.87/7 உள்ளது என்றால் சரிதான்.

9. அயன் புஞ்சை சர்வே.46/1, 87/1, 87/7 ஆகிய எண்களில் 6 ஏக்கர் 47 சென்டில் பிரிவின்றி பாதிபாகத்தை வாதியின் தகப்பனார் மற்றும் உடன் பிறந்த 3 சகோதரர்கள் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். மேற்படி குத்தாலம் பிள்ளையிடம் தான் வாதியின் தகப்பனார் மற்றும் உடன் பிறந்த 3 சகோதரர்கள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். எனவே அயன் புஞ்சை சர்வே.46/1, 87/1, 87/7 ஆகிய எண்களில் 6 ஏக்கர் 47 சென்டில் எங்கள் தரப்பிற்கு 3 ஏக்கர் 23 சென்டும், வாதி தரப்பிற்கு 3 ஏக்கர் 23 சென்டும் பாத்தியம் என்றால் சரிதான்.

10. வாதியின் தாத்தா சுப்பிரமணிய நாடாரும், என் தாத்தா சாமியாடி நாடாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

11. மேல்புறம் உள்ள சர்வே எண்.46/1ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 9 சென்ட் என்றால் சரிதான்.

12. 1 ஏக்கர் 9 சென்டில் தென்பாதி வாதி வகையாறவிற்கும், வடபாதி எங்கள் தரப்பிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சாட்சி தற்போது 46/1

எனக்கு பாத்தியமில்லை என்றும் சர்வே எண்.46/3ல் மட்டுமே பாத்தியம் என பதிலளித்தார்.

13. சர்வே எண்.87/1ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் என்றால் சரிதான். அந்த சொத்தில் கீழ்பாதி வாதி தரப்பினருக்கும், மேல்பாதி எங்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

14. சர்வே எண்.87/7ன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 37 சென்ட் என்றால் சரிதான். அந்த சொத்தில் வடபாதி 1 ஏக்கர் 37 சென்டும், தென்பாதியில் 2 ஏக்கருமாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

15. வடபாதி 1 ஏக்கர் 37 சென்டில் வடக்கு பாதி பகுதி எங்கள் தரப்பினருக்கும், தென்பாதி பகுதி வாதி தரப்பினருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

16. தென்பாதி 2 ஏக்கர் மேல் பாதி பகுதி வாதி தரப்பினருக்கும், கீழ்பாதி பகுதி எங்கள் தரப்பினருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

17. வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்து சர்வே எண்.87/1ல் உள்ள சொத்து என்றால் சரிதான்.

18. சர்வே எண்.87/1ல் உள்ள சொத்தைப் பொறுத்து தனியாக பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல மொத்தமாக மூன்று சொத்திற்கும் பாகம் பிரிக்கப்பட்டது.

19. மேற்படி சொத்துக்கள் 1972 ம் வருடம் பாகம் பிாிக்கப்பட்டது என்றால் இல்லை 1975 ம் வருடம் பாகம் பிரிக்கப்பட்டது.

20. 1975 ம் வருடம் எந்த மாதம், எந்த தேதி என்றால் எனக்கு நினைவில்லை.

21. பாகம் பிரித்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

22. சர்வேயர் வைத்து பாகம் பிரிக்கப்பட்டதா இல்லையா என்றால் சர்வேயர் வைத்து அளவீடு செய்து பாகம் பிரிக்கப்பட்டது. எழுத்து மூலமாக பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை.

23. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் 1975 ம் வருடம் பாகம் பிரிக்கவில்லை என்றும் 1972 ம் வருடமே பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

24. 2 ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

25. நானும், 2 ம் பிரதிவாதியும் சேர்ந்து வா.சா.ஆ.11 ன் படி 09.04.2009 ம் தேதி 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் எங்களுக்கு சர்வே எண்.87/1A-ல் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு கூடுதலாக நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.11 ஆனது வாதியின் சொத்தையும் சேர்த்து கூடுதல்

சொத்தை கிரையம் கொடுத்துள்ளதால் வா.சா.ஆ.11 சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

27. சர்வே எண்.87/1ல் மேல் ஓரம் உள்ள சொத்தை நாங்கள் கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

28. வா.சா.ஆ.11 ஆவணத்தில் மேற்கு எல்கையாக பாட்டை கிழக்கு என எல்கை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாட்டை என்பது தென்வடல் பாதை என்றால் சரிதான். அந்த பாதை தான் மடவாவளாகம் செல்லும் பாதை என்றால் சரியல்ல.

29. வா.சா.ஆ.11 மோசடி ஆவணம் என்பதால் அது வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

30. கடந்த 15.05.2019ல் 2ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு ஒரு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் சர்வே எண்.87/1ல் 1 ஏக்கருக்கு கூடுதல் விஸ்தீரணத்திற்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

31. என் தகப்பனாருககு சர்வே எண்.87/1ல் 1 ஏக்கர் 27 செண்ட் உள்ளதாக நான் கூறுகின்றேன் என்றால் சரிதான்.

32. என் தகப்பனாருக்கு 1 ஏக்கர் மட்டுமே இருக்கவேண்டிய நிலையில் 1 ஏக்கர் 27 செண்ட் இருப்பதாக நான் தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

33. கூடுதல் விஸ்தீரணத்திற்கு மோசடியாக எழுதப்பட்ட கிரையத்தின் அடிப்படையில் மோசடியாக பட்டா பெற்றுள்ளதால் அந்த பட்டா வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

34. சர்வே எண்.46/1,87/, 87/7 ஆகிய எண்களில் குத்தாலிங்கத்திடம் வாங்கிய கிரைய ஆவணத்தின் படி சொத்து என்றும் வேறு வகையில் எனக்கு மேற்படி எண்களில் சொத்து இல்லை என்றால் சரிதான்.

35. வாதி சர்வே எண்.87/1ல் கீழ்பாதியில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை.

36. சர்வே எண்.87/1ல் வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. சர்வே எண்.87/1B ல் வீடு கட்டியுள்ளார்.

37. வாதிகள்
வீடு கட்டி குடியிருப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

38. மோசடியாக நான் கிரையம் கொடுத்து பட்டா பெற்றுள்ளதால் அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றும் வாதிகளுக்கு சர்வே எண்.87/1A1, 87/1B ல் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

39. தபசில் சொத்தானது வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து

வருகிறது என்றும் வாதிகளுக்கு தனித்த பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

40. நான் கிரைய பத்திரம் போட்டதால் 1ம் வாதி மாவட்ட பதிவாளரிடம் புகார்மனு அளித்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

41. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் வாதிகளின் இடத்தில் அத்துமீறி பிரவேசித்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

42. நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வாதிக்கு உரிமைப்பட்ட 2ம் தபசில் சொத்தில் இடைஞ்சல் செய்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

43. 5ம் பிரதிவாதி சித்திரைக்கனி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக நான் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

44. சித்திரைக்கனி வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யாததால் அவர் அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல.

45. வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி